# 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 6/1995)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Aquaculture (Regulation) Act, 1995

## (Tamil Nadu Act No.6 of 1995)

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை


தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 6/1995)

பிரிவு பொருளடக்கம்


1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.
3. நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவை நிறுவுதலுக்கானத் தடை.
4. உரிமத்திற்கான விண்ணப்பம்.
5. மாவட்டக் குழுக்களை அமைத்துருவாக்குதல்.
6. மாவட்டக் குழுக்களின் கூட்டங்கள்.
7. மாவட்டக் குழுக்களின் அலுவல்கள்.
8. உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதி.
9. மானியம் மற்றும் உரிமத்தைப் புதுப்பித்தல்.
10. உரிமத்தை ரத்து செய்வதற்கான அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரம்.
11. உரிமத்தை திருப்பி அளித்தல்.
12. உரிமத்தின் இரண்டாம் படியினை வழங்குதல்.
13. பணிப்புரைகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம்.
14. நுழைவதற்கும் ஆய்வு செய்வதற்குமான அதிகாரம்.
15. மேல்முறையீடு.
16. உயர் நீதிமன்றத்தால் மறுஆய்வு செய்யப்படுதல்.
17. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.
18. தண்டங்கள்.

19. உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடைவிதித்தல்.
20. குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.
21. குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு.
22. ஆய்வு அலுவலர் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.
23. சட்டவிலக்கு உரிமை.
24. இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்.
25. இயக்குநரின் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.
26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

# 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 6/1995

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 1995ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று அது பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை முறைப்படுத்துவதற்கும் அது தொடர்பானவற்றிற்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் நாற்பத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.**– (1) இந்தச் சட்டம், 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிப்பிட கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும், மற்றும் வெவ்வேறு பரப்பிடங்களுக்காகவும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்காகவும் என வெவ்வேறு தேதிகள் குறிப்பிடப்படலாம்.

**2. பொருள்வரையறைகள்.**– இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "நீர்வாழ் உயிரின வளர்ப்பு" என்பது, உவர்நீர் இறால் வகைகள், மீன்கள் அல்லது பிற நீர்வாழ்

உயிரினம் எதையும், உவர்நிலத்தில் உள்ள உவர் நீர் குட்டைகளிலோ, அடைப்பிடங்களிலோ அல்லது பிறவாறோ பிடித்து வைத்து வளர்த்து வருதல் எனப் பொருள்படும். ஆனால், நன்னீரில் வாழ்கின்ற உயிரினங்களின் வளர்ப்பை உள்ளடக்காது;

(b) "நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு" என்பது, நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேற்கொள்ளுகின்ற கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு எனப் பொருள்படும்;

(c) "கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு" என்பது, கடலோர நெடுகிலும் உள்ள நிலங்கள், கழிமுகங்கள், ஆற்றுக்கால்கள், ஆறுகள், வடிகால்கள், கால்வாய்கள் அல்லது கடல் ஓதம் விளைவாக ஏற்பட்ட உப்பங்கழிகளில் வளரும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு எனப் பொருள்படும்;

(d) "மாவட்டக் குழு" என்பது, பிரிவு 5இன்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு மாவட்டக் குழு எனப் பொருள்படும்;

(e) "இயக்குநர்" என்பது, தமிழ்நாடு மீன்வள இயக்குநர் எனப் பொருள்படும்;

(f) "உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதி" என்பது, பிரிவு 8இன்படி நிறுவப்பட்டுள்ள உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதி எனப் பொருள்படும்;

(g) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(h) "ஆய்வு அலுவலர்" என்பது, இயக்குநரால் குறிப்பிடப்படக்கூடிய பரப்பிடங்களுக்காக என இந்தச் சட்டத்தின்படி ஆய்வு அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி வரும் பொருட்டும், அவருக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றிவரும் பொருட்டும் இயக்குநரால் அதிகாரமளிக்கப்படும் மீன்வள ஆய்வாளரின்

படிநிலைக்குக் குறையாத மீன்வளத் துறையின் அலுவலர் எவரும் எனப் பொருள்படும்;

(i) "நபர்" என்பது, நிறுமம், குடும்பம், நிறுவனம், சங்கம் அல்லது தனி நபர்களடங்கிய குழு எதனையும், அது பதிவு செய்யப்பட்டதாக இருந்தாலும் இல்லை என்றாலும் அவற்றையும் உள்ளடக்கும்;

(j) "பாரம்பரிய இடம்" என்பது, நூறு ஆண்டுகளுக்கும் குறையாமல் இருந்து வருகின்ற வரலாறு, தொல்பொருள் அல்லது கலை இயல் முக்கியத்துவம் வாய்ந்த வகுத்துரைக்கப்படும் இடம் எதுவும் எனப் பொருள்படும்.

3. **நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவை நிறுவுதலுக்குத் தடை.**– (1) நபர் எவரும், இயக்குநரால் அளிக்கப்பட்டுள்ள உரிமம் இல்லாமலும், அத்தகைய உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியவாறு இல்லாமலும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலோ அதற்குப் பின்னரோ நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு எதனையும் நிறுவுதல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடன்முன்பு இருந்துவரும் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு எதனையும் நிறுவியுள்ள நபர் எவரும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க மேற்சொன்ன தேதியிலிருந்தது மூன்று மாதங்களுக்குள் உரிமம் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

(3) நபர் ஒருவர், ஒரே நகரம் அல்லது கிராமத்தில் அல்லது வெவ்வேறு நகரங்கள் அல்லது கிராமங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நீர்வாழ் உயிரினப் பிரிவைப் பெற்றிருந்தால், அவர், அத்தகைய நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு ஒவ்வொன்றையும் பொறுத்தமட்டில் தனித்தனி உரிமத்தை பெறுதல் வேண்டும்.

**4. உரிமத்திற்கான விண்ணப்பம்.–** பிரிவு 3இன்படி உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தலும் வகுத்துரைக்கப்படும் விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் என்பதோடு, ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து மாவட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**5. மாவட்டக் குழுக்களை அமைத்துருவாக்குதல்.–** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அரசு, அறிவிக்கையின் மூலமாக அதில் குறிப்பிடப்படும் தேதி முதற்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய மாவட்டக் குழு ஒன்றினை அமைத்துருவாக்கலாம், அதாவது:–

(a) மாவட்ட ஆட்சியர், மாவட்டக் குழுவின் பதவி வழித் தலைவராக இருப்பார்; மற்றும்

(b) வகுத்துரைக்கப்படும் பிற அலுவலர்கள்.

(2) மீன்வள உதவி இயக்குநரோ அல்லது இதன்பொருட்டு அரசினால் அதிகாரமளிக்கப்படும் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தலைமை நிருவாக அலுவலரோ, மாவட்டக் குழுவின் பதவி வழி உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

**6. மாவட்டக் குழுக்களின் கூட்டங்கள்.–** (1)மாவட்டக் குழு தேவைப்படும்போதெல்லாம் அடிக்கடி கூடலாம் என்பதோடு, உட்பிரிவு (2)இன் வகைமுறைகளுக்கு உட்பட்ட கூட்டங்களில் (குறைவெண் வரம்பு உள்ளிட்ட) வகுத்துரைக்கப்படும் அலுவல் நடைமுறை சம்பந்தமான விதிமுறைகளை கடைப்பிடித்தலும் வேண்டும்.

(2) மாவட்டக் குழுவின் தலைவரோ அல்லது அவர் வராதபோது அதன்பொருட்டு அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் எவருமோ மாவட்டக் குழுவின் கூட்டமொன்றில் தலைமை வகித்தல் வேண்டும்.

7. **மாவட்டக் குழுவின் அலுவல்கள்**.– (1) மாவட்டக் குழு, பிரிவு 4இன்படி பெறப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும், பரிசீலனை செய்து எல்லா விதங்களிலும் தேவையெனத் தான் கருதக்கூடிய விசாரணையைச் செய்யலாம் என்பதோடு, அதனை வகுத்துரைக்கப்படும் முறையிலும் காலத்திற்குள்ளும் தனது மேற்குறிப்புகளுடன் இயக்குநருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) மாவட்டக் குழு உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்கையில், பின்வருவனவற்றை, கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது:–

(a) உரிமத்திற்கான விண்ணப்பம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மற்றும் அதன்படிச் செய்யப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க உள்ளதா என்பதை;

(b) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு நிறுவப்படுவதற்காகக் கருதியுள்ள இடம் தடை செய்யப்பட்டுள்ள பரப்பிடத்திற்குள் வரவில்லை என்பதை,

கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**விளக்கம்.–** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, "தடை செய்யப்பட்ட பரப்பிடம்" என்பது, பல்வேறுபட்ட உயிரினக் கூறுகள் செறிந்த சதுப்பு மற்றும் சேற்று நிலம் போன்ற பரப்பிடங்கள் உள்ளிட்ட நஞ்சை நிலங்கள், இடம் விட்டு இடம் பெயரும் பறவை வழித்தடங்கள் மற்றும் இனப் பெருக்கத்திற்கான நிலங்கள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், பாதுகாக்கப்பட்ட பரப்பிடங்கள் எனக் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட உயிரின வாழ்வுக்குரிய இயற்கைச் சூழலுடனான ஒதுக்கிடங்கள், சமூக பாதுகாப்பிற்காக அல்லது வனவள உற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட பரப்பிடங்கள், பராம்பரிய இடங்கள் அல்லது

தொழுகை இடங்கள், பொதுப்பணித்துறையால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் சாம்பல் நிற அல்லது கருநிற பரப்பிடங்கள் (நிலத்தடி நீர்) எனப் பொருள்படும்;

(c) பயிரிடும் நிலங்கள் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்காக மாற்றப்படவில்லை என்பதை;

(d) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு, உயிரின வளர்ப்புக்காக நிலத்தடி நீர் எடுக்கப்படுவதை எதிர்நோக்கி இருக்கவில்லை என்பதை;

(e) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது:–

(A) (i) கடல்நீரை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளைப் பொறுத்தவரையில், ஐம்பது முதல் நூறு மீட்டர்கள் அகலமுடைய அளவிற்கும்; மற்றும்

(ii) கழிமுக நீரினை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளைப் பொறுத்த வரையில், இருபது முதல் இருபத்தைந்து மீட்டர்கள் அகலமுடைய அளவிற்கும் உள்ள இடைப்பட்ட மண்டலப் பகுதியில்,

(B) (i) ஐந்நூறுக்கும் குறைவாக மக்கள் தொகையைப் பெற்றிருக்கின்ற கிராமம் ஒன்றின் வெளி எல்லையிலிருந்து நூறு மீட்டர்களுக்குள்;

(ii) ஐந்நூறுக்கும் அதிகமாக மக்கள் தொகையைப் பெற்றிருக்கின்ற கிராமம் அல்லது நகரம் ஒன்றின் வெளி எல்லையில் இருந்து

முந்நூறு மீட்டர்களுக்குள்; மற்றும்

(iii) தொல்பொருள் இடங்கள் மற்றும் அழியாது எஞ்சி நிற்கும் தொன்மையான இடங்கள் மற்றும் பராம்பரிய இடங்கள் ஆகியவற்றிலிருந்து இரண்டு கிலோ மீட்டர்களுக்குள், நிறுவுதல் கூடாது.

**விளக்கம்.**– இந்தக் கூறின் நோக்கங்களுக்காக–

(i) "இடைப்பட்ட மண்டலப் பகுதி" என்பது, நீர் வாழ் உயிரின வளர்ப்பு மண்டலப் பகுதிக்கும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அல்லாத மண்டலப் பகுதிக்கும் இடைப்பட்ட மண்டலப் பகுதி எனப் பொருள்படும்.

(ii) "நீர் வாழ் உயிரின வளர்ப்பு மண்டலம்" என்பது, இந்தச் சட்டத்தின்படி நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுகின்ற, மேற்கொள்ளப் படுகின்ற ஒரு பரப்பிடம் எனப் பொருள்படும்;

(f) கடல் அணுகு உரிமைக்காகவும் மற்றும் நதியின் கழிமுகம் அல்லது நிகழ்விற்கேற்ப உவர்நீர் நதி அணுகு உரிமைக்காகவும், கடல் நீரைக் கொண்ட பண்ணைகளின் ஒவ்வோர் ஐநூறு மீட்டருக்கும் இடையே இருபது மீட்டர்களுக்குக் குறையாத ஒரு இடைவெளி; மற்றும் கழிமுக நீரைக் கொண்ட பண்ணைகளின் ஒவ்வொரு முந்நூறு மீட்டருக்கும் இடையே ஐந்து மீட்டருக்குக் குறையாத ஒரு இடைவெளியும் இருத்தல் வேண்டும்; மற்றும்

(g) வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள்.

**8. உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதி.–** (1) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவுகளின் மூலம் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சமநிலை சீர்கேட்டினைச் சரிசெய்வதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய உயிரின வாழ்க்கைச் சூழல் சீராக்க நிதி என வழங்கப்படும் ஒரு நிதியை நிறுவுதல் வேண்டும்.

(2) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு ஒவ்வொன்றும், வட்டி இல்லாத தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாயை உயிரின வாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதிக்கு வைப்பீடு செய்து வருதல் வேண்டும்.

(3) உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதி, வகுத்துரைக்கப்படும் முறையில் இயக்குநரால் இயக்கி வரப்படுதல் வேண்டும்.

(4) உரிய உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்கப் பணியானது, இயக்குநரின் மனநிறைவிற்கேற்ப தொடர்புடைய நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நிகழ்வுகளில், வகுத்துரைக்கப்படும் கால அளவின் முடிவில், அந்த நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினால் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்திலிருந்து எழுபத்தைந்து விழுக்காடு மாவட்டக் குழுவுடன் கலந்து ஆய்வு செய்த பின்பு இயக்குநரால் திருப்பி அளிக்கப்படலாம்.

(5) உயிரினவாழ் சுற்றுச்சூழல் சீராக்கப் பணியானது தொடர்புடைய நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படாத நிலையில், அந்த நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினால் வைப்பீடு செய்யப்பட்ட பணமானது அதற்கு திருப்பி அளிக்கப்படுதல் கூடாது; மற்றும் அத்தகைய நிகழ்வுகளில், உயிரின வாழ்

சுற்றுச்சூழல் சீராக்கப் பணியானது, அத்தகைய நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினால் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்திலிருந்து இயக்குநரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

9. **மானியம் மற்றும் உரிமத்தினைப் புதுப்பித்தல்.**– (1) மாவட்டக் குழுவின் குறிப்புரைகளுடன் சேர்ந்த விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றதன் பேரில், இயக்குநர், மனநிறைவு அடைவாரானால், உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஓர் உரிமத்தினை வழங்கலாம் அல்லது ஓர் உரிமத்தினை வழங்க மறுக்கலாம்:

**வரம்புரை**: அவ்விண்ணப்பதாரருக்கு தனது முறையீட்டினை எடுத்து உரைப்பதற்கான ஒரு வாய்ப்பு கொடுக்கப்படாமல், ஓர் உரிமம் மறுக்கப்படுதல் கூடாது,

(2) உட்பிரிவு (1) இன்படி வழங்கப்படும் ஒவ்வோர் உரிமமும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.–

(a) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி (மையச் சட்டம் 6/1974) அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதியின்றி நிறுவப்படுதல் கூடாது;

(b) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள்ளாக ஹெக்டேர் ஒன்றிற்கு ஐந்தாயிரம் ரூபாய்த் தொகையை உயிரின வாழ் சுற்றுச்சூழல் சீராக்க நிதிக்கு வைப்பீடு செய்தல் வேண்டும்;

(c) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, பொதுப் பணித்துறையின் ஒப்புதல் இன்றி, அத்துறையின் வடிகால் மடைவாய்களை திசை திருப்பி விடுதல் கூடாது;

(d) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் வகுத்துரைக்கப் பட்டுள்ள தரங்களுக்கு இணங்க சுத்திகரிக்கப்பட்ட நீரியல் கழிவுகளை வெளியேற்றுவதற்காக நீரியல் கழிவுகள் தேக்க குளங்களுக்கு வகை செய்கின்ற பண்ணைகளின் வரைபடத்தையும் கட்டுமானத்தையும் வடிவமைத்தல் வேண்டும்;

(e) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, சுற்றுச்சூழலுக்கேற்ப, வகுத்துரைக்கப்படும் நிலை நிறுத்தத்தக்க நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(f) நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவானது, நீரியல் கழிவு வெளியேற்று முறையில் கண்டறியும் மட்டத்திற்கும் கீழே இருக்கும் வகையில் இராசாயணங்கள் மற்றும் மருந்துகள் பயன்படுத்தப்படுவதை ஒழுங்குப்படுத்துதல் வேண்டும்; மற்றும்

(g) வகுத்துரைக்கப்படும் பிற நிபந்தனைகள்.

(3) இந்தப் பிரிவின்படி வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலஅளவிற்குச் செல்லத்தக்கதாகும்; மற்றும் அது அவ்வப்போது புதுப்பிக்கப்படலாம்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், உரிமம் வழங்கப்படுதல் தொடர்பாக பொருந்துவது போன்றே உரிமம் ஒன்றைப் புதுப்பித்தல் தொடர்பாகவும் பொருந்துதுல் வேண்டும்.

**10. உரிமத்தை ரத்து செய்வதற்கான அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரம்.–** (1) (a) மோசடி, தவறான தகவல் அளித்தல் அல்லது முக்கியமான விவரங்களை மறைத்தலின் மூலம் உரிமம் பெறப்பட்டிருப்பட்டிருந்தால்;

(b) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் அல்லது அதன்படி செய்யப்பட்டவிதிகளில் எதனையும் அல்லது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனைகளில் எதனையும் உரிமம் பெற்றவர் மீறியுள்ளார் என்றால்;

இந்தச் சட்டத்தின்படி உரிமம் பெற்றவர் உள்ளாகக் கூடிய பிற தண்டம் எதற்கும் பாதகமின்றி, இயக்குநர், எந்தநேரத்திலும், எழுத்துவடிவிலான ஆணையின் வாயிலாக, பிரிவு 9இன்படி வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமம் எதையும் ரத்து செய்யலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(2). உட்பிரிவு (1)இன்படி உரிமம் ஒன்றை ரத்து செய்வதற்கு முன்னர் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு முன்னர், இயக்குநர், உரிமம் பெற்றவர் தனது தரப்பினை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்.

**11. உரிமத்தைத் திருப்பி அளித்தல்.–** உரிமம் பெற்றவர், தனது உரிமத்தின் காலஅளவு முடிவடைவதன் பேரில் அல்லது அதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கின்ற அல்லது ரத்து செய்கின்ற ஆணை எதனையும் பெற்றதன்பேரில், அவர், அந்த உரிமத்தினை இயக்குநரிடம் திருப்பி அளித்தல் வேண்டும்:

**வரம்புரை** : அந்த இயக்குநர், அத்தகைய காலஅளவு முடிவடைந்த பின்பு அல்லது உரிமத்தை ரத்து செய்த பின்பு, உரிமம் பெற்றவர் தனது நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினை மூடிவிடுவதற்கு வசதியாக பொருத்தமானது எனத் தான் கருதக்கூடிய நியாயமான காலஅவகாசம் கொடுக்கலாம்.

**12. உரிமத்தின் இரண்டாம் படியினை வழங்குதல்.–** வழங்கப்பட்ட உரிமம் ஒன்று இழக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டு

இருக்குமானால், இயக்குநர், வகுத்துரைக்கப்படும் விண்ணப்பத்தின்பேரிலும், ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத ஒரு கட்டணம் செலுத்துவதன் பேரிலும், உரிமத்தின் இரண்டாம் படியினை வழங்குதல் வேண்டும்.

**13. பணிப்புரைகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம்**.– இயக்குநர், நீர்வாழ் உயிரின வளர்ப்பு வணிகத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கான உரிமங்கள் தொடர்பான விவரம் எதனையும் பொறுத்து, தான் தேவையானது எனக் கருதும் பொதுத்தன்மை வாய்ந்த ஆணைகளையும், பணிப்புரைகளையும், பொதுவாக உரிமம் பெற்றவர் எவருக்கும் அல்லது உரிமம் பெற்றவர்களுக்கும் பிறப்பிக்கலாம்; மற்றும் உரிமம் பெற்ற ஒவ்வொருவரும், அத்தகைய ஆணைகள் மற்றும் பணிப்புரைகளைச் செயல்படுத்துதல் வேண்டும்.

**14. நுழைவதற்கும் ஆய்வு செய்வதற்குமான அதிகாரம்**.– (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக, ஆய்வு அலுவலர், நியாயமான அனைத்து நேரங்களிலும் உதவியாளருடனோ அல்லது உதவியாளர் இன்றியோ,–

(a) நீர்வாழ் உயிரின வளர்ப்புப்பிரிவு எதிலும் நுழைந்து, நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலத்தையோ அல்லது அதன் நீரார்ந்த பரப்பிடத்தையோ ஆய்வு செய்யலாம் அல்லது சோதனையிடலாம்,

(b) அந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு பிரிவு தொடர்பான கணக்குப் புத்தகம், பதிவேடு, பதிவுரு அல்லது பிற ஆவணம் எதனையும் தாக்கல் செய்வதற்கு அல்லது அத்தகைய ஆவணத்திலிருந்து எடுகுறிப்புகள் அல்லது நகல்கள் எடுக்கச் செய்வதற்கு ஆணையிடலாம்;

(c) அந்த நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவினைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அல்லது அது

தொடர்பாக பணியில் அமர்த்தப்பட்டுள்ள நபர் எவரையும் தேவையான அனைத்து கேள்விகளையும் கேட்டு விசாரணை செய்யலாம்.

(2) உரிமம் பெற்றவரும் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு தொடர்பாக பணியில் அமர்த்தப்பட்டுள்ள அனைத்து நபர்களும், மேற்சொன்ன நோக்கங்களுக்காகக் கோரப்படக்கூடிய ஆய்விற்கும் விசாரணைக்குமான அனைத்து அணுகுமுறைகளையும் வசதிகளையும் ஆய்வு அலுவலருக்கு வழங்குதல் வேண்டும் மற்றும் தங்கள் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பதற்கும், தங்கள் உடைமையிலுள்ள ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் அந்த அலுவலரால் கோரப்படும் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவு தொடர்பான பிற தகவல்களை அளிப்பதற்கும் கடமைப்பட்டவர் ஆவார்.

(3) ஆய்வு அலுவலர், உட்பிரிவு (1) இன்படி ஆய்வு நடத்தியதின் பேரில், உரிமம் பெற்றவர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதனையும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளில் எதனையும் அல்லது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமமானது வழங்கப்பட்டுள்ளதோ அந்த நிபந்தனைகளில் எதனையும் மீறியுள்ளார் என மனநிறைவு அடைந்தால், அந்த ஆய்வு அலுவலர், அது தொடர்புடைய விவரங்களுடன் சேர்த்து இயக்குநரிடம் அறிக்கை அளித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3)இன்படியான அறிக்கையைப் பெற்றதன்பேரில், உரிமம் பெற்றவர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளில் எதனையும் அல்லது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமமானது வழங்கப் பட்டுள்ளதோ அந்த நிபந்தனைகளில் எதனையும் மீறியுள்ளார் என இயக்குநர் மனநிறைவடைவாரானால்,

அவர் தக்கதெனக் கருதும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்:

**வரம்புரை:** உரிமம் பெற்றவர் பாதிப்படைகின்ற வகையில் அவருக்கு எதிரான இந்த உட்பிரிவின்படியான ஆணை எதுவும், தனது விளக்கங்களை வழங்குவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை உரிமம் பெற்றவருக்கு வழங்காமல் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**15. மேல்முறையீடு.–** (1) (a) இச்சட்டத்தின்படி உரிமம் ஒன்றை வழங்க அல்லது புதுப்பிக்க மறுக்கின்ற அல்லது அதனை ரத்து செய்கிற அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கிற இயக்குநரின் ஆணையினால், அல்லது

(b) பிரிவு 14இன், உட்பிரிவு (4) இன்படி இயக்குநரின் ஓர் ஆணையினால்,

குறையுற்ற நபர் எவரும், வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் அத்தகைய காலஅளவிற்குள்ளும் அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்:

**வரம்புரை**: அரசானது, மேல்முறையீடு செய்பவர் குறித்த காலத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து போதுமான காரணங்களினால் தடுக்கப்பட்டார் என மனநிறைவடைந்தால், வகுத்துரைக்கப்படும் காலஅளவு முடிவடைந்த பிறகும் மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி மேல்முறையீட்டினைப் பெற்றதன்பேரில், அரசானது மேல்முறையீட்டாளருக்கு நேர்முகமாக கேட்பதற்கான ஒரு வாய்ப்பை அளித்த பின்பு, மேல்முறையீட்டின் பேரில் தான் பொருத்தம் எனக் கருதும் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**16. உயர்நீதிமன்றத்தால் மறுஆய்வு செய்யப்படுதல்.–** (1) பிரிவு 15இன்படி அரசின்

ஆணையினால் குறையுற்ற நபர் ஒருவர், ஆணையின் நகல் அவருக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாள் காலஅளவிற்குள் அந்த ஆணையின் மறுஆய்வுக்கான விண்ணப்பத்தை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்:

**வரம்புரை**: உயர்நீதிமன்றமானது, மேற்சொன்ன அறுபதுநாள் காலஅளவிற்குள் விண்ணப்பதாரர் போதுமான காரணங்களுக்காக விண்ணப்பத்தை தாக்கல் செய்யவில்லை என மனநிறைவடைந்தால், அறுபது நாள் காலஅளவு முடிவடைந்த பின்பு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தை மேலும் முப்பதுநாள் காலஅளவிற்குள் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) விண்ணப்பம், வகுத்துரைக்கப்படும் படிவத்தில், அத்தகைய முறையில் சரிபார்க்கப்பட்டும், கட்டணத்துடன் சேர்த்தும் தாக்கல் செய்தல் வேண்டும்.

(3) மறுஆய்வுக்கான விண்ணப்பத்தை முடிவு செய்யும்போது, உயர்நீதிமன்றம், அந்த ஆணையை உறுதிப்படுத்தலாம், ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்:

**வரம்புரை**: வழக்கின் தரப்பினருக்கு நேர்முகமாக கேட்பதற்கான ஒரு வாய்ப்பை அளிக்காமல், தரப்பினர் பாதிக்கப்படக்கூடிய எந்த ஆணையும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும் அறுதியானதாக இருக்கும்.

**17. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.–** (1) இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் செய்யும் நபர் ஒரு நிறுமமாக இருக்கும் போது, அக்குற்றச்செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொருட்டு, அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில்

கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாயிருந்தவரும், அந்த நிறுமமும்கூட அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றச்செயலானது தமக்கு தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அக்குற்றச்செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ மெய்ப்பிப்பாராயினால், அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஏதேனும் நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருந்து, அக்குற்றச் செயலானது அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் எவர் ஒருவரின் அனுமதியுடனோ மறைமுக ஆதரவுடனோ செய்யப் பட்டிருக்கின்றது அல்லது அவரது கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கின்றது என மெய்ப்பிக்கப்படும்போது, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே அவர் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டமைப்பு எதுவும் எனப் பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகம், சங்கம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) "இயக்குநர்" என்பது–

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, நிறுவகத்தில் உள்ள கூட்டாளி ஒருவர்;

(ii) சங்கம் அல்லது தனி நபர்களின் கழகம் தொடர்பாக, சங்கம் அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி நிகழ்விற்கேற்ப சங்கம் அல்லது பிற கழகத்தின் விவகாரங்களில் மேலாண்மை எந்த நபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த நபர்

எனப் பொருள்படும்.

**18. தண்டங்கள்**.– (1) நபர் எவரும் இச்சட்டத்தின் வகைமுறைகளில் எவற்றையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் மீறுவாரானால் அல்லது மீறுவதற்கு முயற்சி செய்வாரானால் அல்லது தெரிந்தே மீறுகைக்கு உடந்தையாய் இருப்பாரானால், அவர், இருபதாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கபடக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் தொடர்ந்து மீறுதல் ஏற்படும் போது, அதற்காகத் தண்டிக்கப்பட்ட பிறகு, அத்தகைய மீறுதல் தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கபடக்கூடிய கூடுதல் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படி ஏதேனும் அதிகாரஅமைப்புக்கு அல்லது அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்தி, ஏதேனும் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிரிவில் நுழைவதிலிருந்து அந்த அதிகாரஅமைப்பை அல்லது அலுவலரை, நபர் எவரும் வேண்டுமென்றே தடைசெய்தால், அவர் ஆயிரம் ரூபாய்

வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**19. உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடைவிதித்தல்.–** இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகைசெய்யப்பட்டிருந்தால் அன்றி, உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி, அரசு, அதிகாரஅமைப்பு எதனாலும், அரசு அலுவலர் எவராலும் முடிவு செய்யப்படுமாறு அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமாறு கோரப்படும் பிரச்சனை எதையும், முடிவு செய்வதற்கோ அல்லது நடவடிக்கை எடுப்பதற்கோ அதிகார வரம்பு பெற்றிருத்தல் கூடாது.

**20. குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.–** நீதிமன்றம் எதுவும், இதன்பொருட்டு அதிகாரஅமைப்பாலோ அல்லது அரசால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலராலோ செய்யப்பட்ட குற்றச்செயலுக்குக் காரணமாய் அமைகின்ற பொருள் குறித்து எழுத்து வடிவில் செய்யப்பட்ட அறிக்கை ஒன்றின்பேரில் தவிர, இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

**21. குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு.–** பெருநகர் குற்றவியல் நடுவர் அல்லது முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவரின் நீதிமன்றத்திற்குக் கீழ்நிலையில் உள்ள நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

**22. ஆய்வு அலுவலர் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.–** இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி, அதிகாரஅமைப்பு ஒன்றிற்கு அல்லது அலுவலர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட கடமை

எதனையும் நிறைவேற்றுவதற்கு உரிய அதிகாரமளிக்கப்பட்ட அந்த அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும் மற்றும் அந்த அலுவலர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 21ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**23. சட்ட விலக்கு உரிமை.**– இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின்படி, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் அந்த அதிகாரஅமைப்பு அல்லது அரசு அலுவலர் அல்லது பணியாளர்களுக்கு எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் காரணமாக அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின்படியும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் ஏற்படுத்தப்பட்ட அல்லது பெரும்பாலும் ஏற்படுத்தப்படக்கூடிய சேதம் எதற்காகவும் அரசிற்கு எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**24. இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்.**– இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது ஒப்பந்தம் எதிலும் அடங்கியுள்ளதற்கு முரணாக என்ன இருந்தபோதிலும், செயல்விளைவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**25. இயக்குநரின் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.–** (1) இயக்குநர், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்படி அவருக்கு உரிய அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருவதற்கு அதிகாரஅமைப்பு எதற்கும் அல்லது அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம் மற்றும் அதே முறையில் அத்தகைய அதிகாரத்தைத் திரும்பப் பெறலாம்.

(2) உட்பிரிவு (1) (a)இன்படி ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் எதனையும் செயற்படுத்துதல், அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(b) அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரஅமைப்பின் அல்லது அலுவலரின் செயற்பாடுகளை அல்லது நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், திருத்தி அமைப்பதற்கும்கூட இயக்குநர் அதிகாரம் பெற்றிருப்பார்.

**26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அரசு விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு ஊறின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் விவரங்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கும் வகைசெய்யலாம், அதாவது–

(a) உரிமம் ஒன்றிற்கான, விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான, படிவமும் முறையும் அத்தகைய உரிமத்திற்கும் அதனைப் புதுப்பித்தலுக்குமான கட்டணங்கள்; உரிமம் ஒன்று பிரிவு 9இன்படி எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் எந்தப் படிவத்தில்

வழங்கப்படக்கூடும் என்பதும் மற்றும் உரிமம் ஒன்றானது எந்தக் காலஅளவிற்கு புதுப்பிக்கப்படலாம்;

(b) பிரிவு 12இன்படி உரிமத்தின் இரண்டாம் படி ஒன்றைப் பொறுத்து, செலுத்தப்படத்தக்க கட்டணம்;

(c) பிரிவு 15இன்படி மேல்முறையீடு ஒன்று, எந்தப் படிவத்திலும் முறையிலும் மற்றும் எந்தக் காலத்திற்குள்ளாகவும், செய்யப்படலாம் என்பதும் மற்றும் அந்த மேல்முறையீட்டினை முடிவு செய்வதில் அரசினால் பின்பற்றப்படும் நடைமுறை;

(d) விண்ணப்பத்தின் படிவமும் அதனை சரிபார்க்கும் முறையும் மற்றும் பிரிவு 16இன்படி சீராய்விற்கான விண்ணப்பத்துடன் வரவேண்டிய கட்டணம்;

(e) இந்தச் சட்டத்தின்படி, வகைசெய்யப்பட வேண்டிய அல்லது வகைசெய்யப்படக்கூடிய பிற விவரம் எதுவும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி, செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்ட ஒரு நாளில் நடைமுறைக்கு வரும் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வரும் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும்,

அது செய்யப்பட்டதற்கு அல்லது பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடியவிரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரிலோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத் தொடரிலோ முடிவடைவதற்கு முன்பு, அப்பேரவை அந்த விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படக் கூடாது அல்லது வெளியிடப்படக் கூடாது என்று முடிவு செய்யுமானால், அந்தவிதி, அல்லது அறிவிக்கை, அதற்குப் பின்னர், அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வரும், அல்லது நிகழ்விற்கேற்ப, நடைமுறைக்கு வராமலே போகும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.